# நூலக வளர்ச்சியில் அறிவியலின் பங்கு

**ஜெயகலா வி, ஆன்றின் மேரி எஸ் & ஸ்னோ ஜெ ஷர்மிளா**
நூலகர், ஹோலிகிறாஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629004
கணிதத்துறை, ஹோலிகிறாஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629004
ஆங்கிலத்துறை, ஹோலிகிறாஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629004
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627012
மின்னஞ்சல்: jaisteiv@gmail.com

**கட்டுரைச்சுருக்கம்**

*நூலகம் என்பது அறிவு, கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு ஆதாரமாகச் செயல்படும் முக்கியமான அமைப்பாகும். அறிவியல் வளர்ச்சி என்பது புதிய தகவல்கள், கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் மனிதவாழ்க்கையை மேம்படுத்துவதாகும். இவ்வளர்ச்சிக்கு தகவல்களை சேமித்து வைத்திருக்கும் இடமாகவும் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு ஆதாரதரவுகளை வழங்கும் இடமாகவும் இருக்கின்றன. நவீன நூலகங்கள் டிஜிட்டல் வசதிகளுடன் கூடியதாக உள்ளதால், உலகம் முழுவதும் உள்ள அறிவு தகவல்களை உடனடியாக அணுக முடிகிறது. மேலும் நூலகங்கள் e-journals, online databases போன்ற தொழில் நுட்பங்களை வழங்குவதன் மூலம் அறிவியல் ஆய்வுகளை விரைவாகவும் திறமையாகவும் மேற்கொள்ள உதவுகின்றன. மாணவர்களுக்கு திட்டப் பணிகள் இ-ஆய்வுகள் போன்றவற்றிற்கும் இதுபெரிதும் பயன்படுகிறது.*

***திறவு சொற்கள்:*** *நூலகம், நூலகவளர்ச்சி, நவீன நூலகம்*

**முன்னுரை**

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவளர்ச்சி 20- ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனிதகுலத்தின் அனைத்து துறைகளிலும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அந்த மாற்றங்களில் முக்கியமான ஒன்று–நூலகத்தின் அடித்தள வடிவமைப்பிலும் சேவைகளிலும் ஏற்பட்டமாற்றம். நூலகம் ஒரு விஞ்ஞான உள்கட்டமைப்பாக மாறியுள்ளது. இந்நிலையில் ,நூலகவளர்ச்சியில் அறிவியல் முக்கிய பங்கு வகிக்கிறது.

**அறிவியல் மற்றும் நூலகம்**

அறிவியல் என்பது ஒழுங்கமைந்த அறிவைப் பெற்று அதை பகிரும் முறையாகும். நூலகம் என்பது அந்த அறிவைப் பாதுகாக்கும், பரப்பும் தளமாக விளங்குகிறது. எனவே அறிவியல் மற்றும் நூலகம் இரண்டும் ஒரே நோக்குடன் செயல்படுகின்றன. அறிவியல் மூலமாக நூலகங்கள் பல்வேறு தொழில் நுட்பங்களை தங்களிடம் ஏற்க ஆரம்பித்தன. உதாரணமாக டிஜிட்டல் நூலகம், ஆன்லைன் தரவுத் தொகுப்புகள், ஆட்டோமேஷன் மென்பொருட்கள் ஆகியவை அனைத்தும் அறிவியலின் பயன்களாகும்.

**நூலகதொழில் நுட்பவளர்ச்சி**

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் உதவியால், நூலகங்கள் கீழ்கண்ட மாற்றங்களை அனுபவித்துள்ளன.

- **ஆட்டோமேஷன் மற்றும் மென்பொருள் பயன்பாடு**

  நூலக மேலாண்மைக்கான மென்பொருள்கள் (Library Management Software –LMS) வழியாக–நூலக மேலாண்மைக்கான மென்பொருள்கள் (Library Management Software -

LMS) வழியாக புத்தக பதிவு வாடிக்கையாளர் சேவைகள், தேடல் மற்றும் கணக்கீடுகள் ஆகியவை எளிமையாக்கப்பட்டுள்ளன.

- **இணையதள சேவைகள்**

  இணையம் மூலம் புத்தகதேடல், டிஜிட்டல் நூலகம் (e-library), ஓபாக் (OPAC (Online Public Access Catalogue) போன்ற வசதிகள் அறிமுகமாகியுள்ளன.

- **மின்னணு வளங்கள்**

  ஈ-புத்தகங்கள், ஈ-ஜர்னல்கள், டிஜிட்டல் ஆராய்ச்சி ஆவணங்கள் ஆகியவையும் அறிவியலின் மூலம் உருவாகியுள்ளன.

- **தொகுப்பியல் மற்றும் தரவுத் தொகுப்புபராமரிப்பு**

  அறிவியல் முறைகளின் மூலமாக தரவுகளை தரமாக தொகுத்து பராமரிக்க முடிகிறது. (metadata, data curation)

**அறிவியல் நூலகங்களின் பங்கு**

அறிவியல் நூலகங்கள், குறிப்பாக ஆராய்ச்சி நிறுவனங்களில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்விக்கான ஆதாரமாகின்றன. இதில் விஞ்ஞானக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வுத் தேடல்கள், மின்னணுதரவுகள் போன்றவை அடங்கும்.

**உதாரணமாக**

- ISRO, DRDO போன்ற இந்திய அறிவயல் ஆய்வு நிலையங்கள் தங்களுக்கே நூலகங்களை வைத்துள்ளன.
- இந்தியாவின் NISCAIR (National Institute of Science Communication and Information resources) போன்றவை அறிவியல் தகவல்களை பரிமாறும் முக்கிய மையங்களாக செயல்படுகின்றன.

**எதிர்கால நோக்கம்**

அறிவியலின் பங்களிப்புகள் தொடாந்து நூலகத் துறையை வடிவமைத்து வருகின்றன.

- செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தேடல் வசதிகள்
- மொழிப்பெயர்ப்பு தொழில்நுட்பம்
- வாடிக்கையாளர் நடத்தை அடிப்படையில் நூலக சேவை மேம்படுத்தல் ஆகியவையும் வரப்போகின்றன.

**முடிவுரை**

நுலகவளர்ச்சியில் அறிவியல் ஒரு முக்கிய உந்து சக்தியாகத் திகழ்கிறது. அதன் வாயிலாக தகவல் தொடர்பு, சேமிப்பு, பகிர்வு போன்றவை சீர்படுகிறது. எதிர்கால நூலகங்கள் அறிவியலின் அடிப்படையில் இன்னும் பல்வேறு சவால்களை எதரிர்கொண்டு முன்னேறக் கூடியவை.

**மேற்கோள்கள்**

1. Kumar, K. (2015). Library and Information Science. Vikas Publishing House.
2. Singh, S. P. (2014). Digital Libraries: Concepts and Technologies. New Delhi: Ess Ess Publications.

3. Chowdhury, G. G. (2010). Introduction to Modern Information Retrieval (3rd ed.). London: Facet Publishing.
4. Ranganathan, S. R. (1931). The Five Laws of Library Science. Madras Library Association.
5. Marchionini, G. (1995). Information Seeking in Electronic Environments. Cambridge University Press.